# ...ட வழங்க
# ...அறிவுறுத்தல்

...உத்தரவிட்டுள்ளது.
மாணவர்கள் படிக்கும் பள்ளிகளில், தலைமை ஆசிரியர்கள் மேற்பார்வையில், பெற்றோரிடம் வழங்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இவ்வாறு, பதில் மனுவில் ...றப்பட்டுள்ளது.
வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது ...திபதிகள், 'ஏற்கனவே, மாண...ர்களுக்கு மதிய உணவின் ...போது முட்டை வழங்கப்பட்டு ...ந்தது. எனவே, அவர்களுக்கு தொடர்ந்து முட்டை வழங்கு...தை பரிசீலிக்க வேண்டும்' ...ன்றனர்.
உடனே, மனுதாரரின் வழக்...ஞர், 'மாணவியருக்கு, ஏற்க...வே வழங்கியபடி, நாப்கின் ...ங்க வேண்டும்' என்றார்.
இதையடுத்து, மாணவ – மாணவியருக்கு முட்டை மற்... நாப்கின், எந்த முறையில் ...ங்கலாம் என்பது குறித்து, ...க்கை தாக்கல் செய்யும்படி, ...சுக்கு உத்தரவிட்டு, விசாரணையை வரும், 3ம் தேதிக்கு, ...திகள் தள்ளி வைத்தனர்.

# ...பெட்டி
# ...ரிப்பா?

...ார்.
...து குறித்து, ஐ.சி.எப்., ...பார்கள் சங்கத்தினர் கூறிய...து:
...ல்வே வாரிய தலைவர், ... தொழிற்சாலைகளில், ... பாரத் ரயில் பெட்டி ...தயாரிக்கப்பட உள்ளதாக ...வித்துள்ளார். இதனால், ...ப்.,புக்கு முக்கியத்துவம் ...க்கப்பட்டு விட்டதோ என, ...க்க வேண்டியுள்ளது.
...தே பாரத் ரயில் பெட்டிகள், ...ப்.,பில், முதன் முதலாக ...க்கப்பட்டதால், உலக அள... பெருமை பெற்றுள்ளன.
...னால், ஐ.சி.எப்.,பில் ... பெட்டிகள் தயாரிக்க, ...ம் முக்கியத்துவம் அளிக்க...டும். மீண்டும் பெட்டிகள் ...கும் உத்தரவை, ஆர்வத் ...எதிர்பார்த்துள்ளோம்.

# கோவை, நீலகிரிக்கு கனமழை வாய்ப்பு

**சென்னை, ஜூலை 31–**
'கோவை, நீலகிரி மாவட்டங்களில், இன்று கன மழை பெய்யும்' என, சென்னை வானிலை மையம் அறிவித்து உள்ளது.

சென்னை வானிலை மையம் வெளியிட்ட அறிவிப்பு:

வளிமண்டல மேல் அடுக்கு சுழற்சி காரணமாக, வடக்கு கடலோர மாவட்டங்கள், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், தர்மபுரி, நீலகிரி, கோவை மற்றும் புதுச்சேரியில், இன்று லேசானது முதல் மிதமான மழை வரை பெய்யலாம்.

கோவை, நீலகிரி மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யும்.

சென்னையில், வானம் மேக மூட்டமாக காணப்படும். சில பகுதிகளில், லேசான மழை பெய்யும்.

இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.


## TAMIL NADU NURSES AND MIDWIVES COUNCIL

(Constituted Under Tamil Nadu Act III & XXVI of 1926 & 1960)
Jayaprakash Narayanan Maliga, Old No.140, New No.56, Santhome High Road, Mylapore, Chennai-600 004
Tel: 044-46785539 E-Mail: info@tamilnadunursingcouncil.com www.tamilnadunursingcouncil.com

**அங்கீகாரம் பெற்ற நர்சிங் கல்வி நிறுவனங்கள் பற்றிய தகவல் 2020–2021**

தமிழ்நாட்டில் நர்சிங் பள்ளி / கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு நர்சிங் கவுன்சில் மற்றும் இந்தியன் நர்சிங் கவுன்சில் ஆகும். இத்தகைய கவுன்சில்களின் அங்கீகாரம் பெற்ற நர்சிங் கல்லூரிகளில் பயில்வதே முறையான கல்விக்கு வழிவகுக்கும். ஆதலால் நர்சிங் படிப்பு பயில விரும்பும் மாணவ / மாணவியர்கள் தாங்கள் தேர்வு செய்யும் நர்சிங் பள்ளி அல்லது கல்லூரியானது அங்கீகாரம் பெற்றுள்ளதா என்பதை அறிந்து கொள்ள எங்களது இணையதளத்தில் பார்த்து அறிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.
இணையதள முகவரி www.tamilnadunursingcouncil.com/recognised_institutions.php

**பொதுமக்கள் கவனத்திற்கு**

நர்சிங் பயிற்சி (Nursing Training) என்ற பெயரில் பல பெரிய / சிறிய மருத்துவமனைகள், நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள், கீழ்கண்ட பெயர்களில் போலி நர்சிங் பயிற்சிகளை நடத்தி நர்சிங் டிப்ளமா மற்றும் சர்டிபிக்கேட்களை வழங்குகிறார்கள். இந்த சர்டிபிக்கேட்களை இக்கவுன்சிலில் பதிவு செய்ய முடியாது. இத்தகைய கல்வி நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

- டிப்ளமா இன் நர்சிங் அசிஸ்டென்ட் கோர்ஸ் (Diploma in Nursing Assistant Course) (6 months / 2 years)
- டிப்ளமா இன் நர்சிங் (Diploma in Nursing) (2 years)
- டிப்ளமா இன் ஃபர்ஸ்ட் எய்டு நர்சிங் (Diploma in First Aid Nursing) (2 years)
- வில்லேஜ் ஹெல்த் நர்சிங் (Village Health Nursing) (2 years)
- டிப்ளமா இன் நர்சிங் எய்டு (Diploma in Nursing Aid) (2 years)
- டிப்ளமா இன் ஃபர்ஸ்ட் எய்டு & ப்ராக்டிகல் நர்சிங் (Diploma in First Aid & Practical Nursing)
- டிப்ளமா இன் ப்ராக்டிகல் நர்சிங் (Diploma in Practical Nursing) (1 year / 2 years)
- சர்டிஃபிகேட் இன் நர்சிங் (Certificate in Nursing) (1 year)
- அட்வான்ஸ்டு டிப்ளமா இன் நர்சிங் அசிஸ்டென்ட் (Advanced Diploma in Nursing Assistant) (2 years)
- டிப்ளமா இன் ஹெல்த் அசிஸ்டென்ஸ் (Diploma in Health Assistance (1 year)
- நர்ஸ் டெக்னிசியன் கோர்ஸ் (Nurse Technician Course)
- ஹெல்த் கைடு கோர்ஸ் (Health Guide Course)
- சர்டிஃபிகேட் இன் ஹெல்த் அசிஸ்டென்ட் (Certificate in Health Assistant)
- சர்டிஃபிகேட் இன் ஹாஸ்பிட்டல் அசிஸ்டென்ட் (Certificate in Hospital Assistant)
- சர்டிஃபிகேட் இன் பெட்சைடு அசிஸ்டென்ட் (Certificate in Bedside Assistant)
- சர்டிஃபிகேட் இன் பேஷன்ட் கேர் (Certificate in Patient Care)
- சர்டிஃபிகேட் இன் ஹோம் ஹெல்த் கேர் (Certificate in Home Health Care)

எனவே, இக்குழுமத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் அனைவரும் இக்குழுமத்திலிருந்து 2019–2020ம் ஆண்டுக்கான அங்கீகார ஆணையை இக்குழுமத்தின் 11(2) (c) ன் சட்டப்படி (Tamilnadu Act III & XXVI of 1926 & 1960) கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும்.

மேலும் இந்தியா முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட செவிலியப் படிப்புகள் பாடநெறிகள்

1) Certificate Course in Auxiliary Nursing-Midwifery
2) Diploma in General Nursing & Midwifery
3) B.Sc., (Nursing)

தமிழ்நாடு நர்சிங் கவுன்சிலின் சட்டப் பிரிவு 12 (a) (1) மற்றும் (2)ன் படி, இதுபோன்ற போலி படிப்புகளை நர்சிங் என்ற பெயரில் நடத்தும் நிறுவனம், சங்கம் மற்றும் பல்கலைக்கழகங்கள் மீது அபராதமும் உரிய நடவடிக்கையும் எடுக்கப்படும் என இந்த பொது அறிக்கை மூலம் அனைவருக்கும் எச்சரிக்கிறோம். மேலும் சென்னை உயர்நீதி மன்ற ஆணை WP No.16556 of 2014 நாள் 13.04.2015-ன் படி போலி நர்சிங் பயிற்சி நிறுவனங்களின் மீது தமிழக அரசின் நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.
மேலும் மேற்கண்ட அங்கீகரிக்கப்படாத படிப்புகளை படித்தால் அரசுப்பணியில் சேர முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் இந்த மாணவ மாணவியர்கள் எந்த ஒரு மருத்துவமனைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட செவிலியராக பணிபுரிய இயலாது மற்றும் நர்சிங் கவுன்சிலில் இப்படிப்பினை பதிவு செய்ய இயலாது என்பதையும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். அவ்வாறு பணிபுரிவதை நர்சிங் கவுன்சிலின் கவனத்திற்கு தகவல் வந்தால் கவுன்சிலின் சட்டப்படி அவர்களுக்கு அபராதமும் மற்றும் criminal action எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.
பொது மக்கள் இவ்வாறான மேற்கண்ட பயிற்சிகள் நடத்துபவர்கள் விவரங்களை முகப்பில் அளித்துள்ள இக்குழுமத்தின் முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ மேல் நடவடிக்கை எடுக்க தகவல் தெரிவிக்கவும் கோரப்படுகிறது.
எனவே இத்தகைய நிறுவனங்கள் தானாக முன்வந்து மேற்கூறிய பயிற்சிகளை நிறுத்திவிட அறிவுறுத்தப்படுகிறார்கள். இல்லையெனில், அந்தகைய நிறுவனங்களின் மீது கவுன்சிலின் விதிகளின்படி அபராதமும் மற்றும் சட்டப்படி உரிய நடவடிக்கையும் எடுக்க நேரிடும் என்பதை இந்த அறிக்கையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

பதிவாளர்
தமிழ்நாடு செவிலியர் குழுமம், சென்னை 600 004.